# சங்க இலக்கியங்களில் தொல்காப்பியரின் மெய்ப்பாடுகள்

# Physical Expression Mentioned by Tolkappiyar in Sangam Literature

***முனைவர் கி. சங்கர நாராயணன்***
உதவிப் பேராசிரியர் துறைத்தலைவர் (பொ.)
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**Dr. K. Sankara Narayanan**
*Assistant Professor & Head (i/c)*
*Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*

***ஆய்வுச் சுருக்கம்***

*தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணத்திற்கு இலக்கணம் பகரும் இலக்கணமாகத் திகழ்கிறது மனித வாழ்வின் அன்றாட மெய்ப்பாடுகளைப் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டில் தெளிவாக விளக்குகின்ற தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை என்ற எட்டு வகையான மெய்ப்பாடுகளை விளக்குகிறார். தொல்காப்பியர் சுட்டும் எட்டு வகையான மெய்ப்பாடுகளைச் சங்க இலக்கியங்களில் பொருத்திப் பார்த்து அதன் வருகை முறைகளை அறிந்து எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை*

***Abstract***

*Tolkappiyam is a grammar that provides grammar for the five categories of Ezhuthu, Chol, Porul, Yappu, and Ani. The reality of materialism clearly explains the daily physical expression of human life. Tolkappiyar explains the eight types of physical expression viz., nagai, alugai, ilivaral, marutkal, achcham, perumitham, vekuli, vuvagai. The purpose of this article is to identify the eight types of physical expression written by Tolkappiyar in the Sangam literature and find out the methods of its occurrence.*

***Keywords****: Sangam Literature, Nagai, Alugai, Ilivaral, Marutkal, Achcham, Perumitham, Vekuli, Vuvagai*

**Citation**

Sankara Narayanan, K. "Physical Expression Mentioned by Tolkappiyar in Sangam Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 10–18.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095845*

**ஆய்வுக் கட்டுரை**

*மெய்யின்கண் தோன்றும் மெய்ப்பாட்டினைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் எண் வகையாக எடுத்துரைக்கின்றார். தொல்காப்பியர் மெய்ப்பாட்டினை இரண்டு வகையாகப் பாகுபடுத்துகிறார். ஒன்று, பொதுவான மெய்ப்பாடு, மற்றொன்று அகம்சார்ந்த மெய்ப்பாடு. சுவை என்பதைத் தொல்காப்பியர் மெய்ப்பாடு என்கிறார். உள்ளத்திலும் உடலிலும் மெய்ம் மயிர் சிலிர்த்தல், கண்ணீர் அரும்பல், வியர்த்தல் என வெளிப்படும்போதுதான் அவை புறத்தார்க்குப் புலனாகும். அவ்வாறு புலனாகும் சுவைகள் எட்டாகும்.*

***நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று***
***அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப (தொல்.மெய்ப்பாடு-1197)***

*இந்த எண்வகையான மெய்ப்பாடுகளுள் ஒன்வொன்றிற்கும் நான்குவகை தோன்றுமிடங்களைச் சுட்டுவதால், மெய்ப்பாடு தோன்றுமிடங்களாக முப்பதிரண்டு இடங்களைச் சுட்டுகின்றார். தொல்காப்பியர் சுட்டும் இந்த எண்வகை மெய்ப்பாடுகளையும் அவைதோன்றும் முப்பத்திரண்டு இடங்களையும் சங்க இலக்கியங்களில் நாம் பொருத்தி இனம் காணலாம்.*

**நகைச் சுவை**

***எள்ளல் இளமை பேதைமை மடன் என்று***
***உள்ளப்பட்ட நகை நான்கு என்ப (தொல்.மெய்ப்பாடு - 1198)***

*நகைச்சுவை என்ற மெய்ப்பாடு எள்ளல், இளமை, பேதைமை, மடன் எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். சங்க இலக்கியங்களில் நகை என்ற சொல்லானது முத்துவடம், விளையாட்டு, பரிகாசம், ஒளி, சிரிப்பு, புன்னகை, பொலிவு, மகிழ்ச்சி, மலர்ந்த மலர் என்ற சொற்களில் எடுத்தாளப்படுகின்றது. சிரிப்பைத் தருகின்ற தோழி என நற்றிணை நகையினை அறிமுகம் செய்கிறது.*

***நகை ஆகின்றே தோழி***
***..***
***பெரும் கடல் சேர்ப்பன் தொழுது நின்றதுவே (நற்.245:1-12)***

*இழைகளை அணிந்த இனிய புன்னகையினையுடைய மகளிர் எனப் பொருநராற்றுப்படை விளக்கம் தருகிறது.*

***இழை அணி வனப்பின் இன் நகை மகளிர் (பொரு.85)***

*குறவரின் இளமகளாகிய, கொடி போன்ற இடையையும் மடப்பத்தையும் உடைய, வள்ளியோடே மகிழ்ச்சியைப் பொருந்திற்று எனத் திருமுருகாற்றுப்படை விளக்கம் தருகிறது.*

***குறவர் மட மகள் கொடி போல் நுசுப்பின்***
***மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே (திரு.101-102)***

*மிகவும் அதிமான மெல்லியல்பு கொண்டவளான இவள், விருப்பத்துடன் நீ விளையாட்டாகப் பொய்க்கோபம் கொண்டு மறைந்திருந்தாலும், அந்தச் சிறு பிரிவிற்கே அஞ்சி நடுங்குகின்றவளாயிற்றே எனக் கலித்தொகை உரைக்கின்றது.*

***நனி கொண்ட சாயலாள் நயந்து நீ நகை ஆக***
***துனி செய்து நீடினும் துறப்பு அஞ்சி கலுழ்பவள் (கலி.10:14-15)***

**பேதமை**

*எழுவகைப் பருவப் பெண், இளமை, அறிவிலி, அறிவில்லாதது, அறியாமை, கள்ளங்கபடமற்ற ஆண், கள்ளங்கபடமற்ற பெண் மற்றும் சூதுவாது அற்றவர் என்ற பொருளில் பேதைமை என்ற சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப்படுகின்றது.*

***முலை முகம்செய்தன முள் எயிறு இலங்கின***
***தலை முடி சான்ற தண் தழை உடையை***
***அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்***
***மூப்பு உடை முது பதி தாக்கு அணங்கு உடைய***
***காப்பும் பூண்டிசின் கடையும் போகலை***
***பேதை அல்லை மேதை அம் குறுமகள் (அகம்.7:1-6)***

*முலைகள் கூம்பி நிறைந்த வளர்ச்சியுற்றன. கூரிய பற்கள் மின்னுகின்றன. தலையில் கூந்தலும் நன்கு வளர்ந்துள்ளது. குளிர்ந்த தழையாடையையும் உடுத்தியுள்ளாய். சுற்றித்திரியும் விளையாட்டுத் தோழியருடன் எவ்விடத்தும் செல்லாதிருப்பாய், மிகப் பழமை வாய்ந்த இந்த மூதூர் வருத்தும் தெய்வங்களை உடையது. காவலுக்கு உட்பட்டிருக்கவேண்டும், வீட்டின் வெளி வாசல் வரைக்கும் போகக்கூடாது. சிறுமி அல்லவே நீ, அறிவுள்ள சிறுமகளே என அகநானூறு விளக்கம் தருகிறது.*

***பா அடி உரல பகு வாய் வள்ளை***
***ஏதில்மாக்கள் நுவறலும் நுவல்ப***
***அழிவது எவன்-கொல் இ பேதை ஊர்க்கே (குறு.89:1-3)***

*பரந்த அடிப்பகுதியையுடைய உரலிடத்து பகுத்த வாயாற் பாடும் வள்ளைப்பாட்டை அயலோராகிய பெண்கள் குறையும் கூறுவர்; கெடுதல்தான் யாது இந்த அறிவில்லாத ஊருக்கு எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.*

***இரும் சேறு ஆடிய நுதல கொல் களிறு***
***பேதை ஆசினி ஒசித்த***
***வீ ததர் வேங்கைய மலை கிழவோற்கே (நற்.51:9-11)***

*கரிய சேற்றைப் பூசிக்கொண்ட நெற்றியையுடையதுமான கொல்லவல்ல ஆண்யானை இளையதாகிய ஆசினிப் பலாவின் கிளையை வளைத்து முறித்து, மலர்கள் செறிந்த வேங்கைமரத்தின் நிழலில் தங்கியிருக்கும் மலையை உடைய நம் தலைவனுக்காக என நற்றிணை கூறுகின்றது.*

***கறவை தந்த கடும் கால் மறவர்***
***கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ***
***முதுவாய் பெண்டின் செது கால் குரம்பை***
***மட மயில் அன்ன என் நடை மெலி பேதை***
***தோள் துணை ஆக துயிற்ற துஞ்சாள் (அகம் 63/12-16)***

*கறவைகளைக் கொண்டுவந்த மிகுந்த வேகமுள்ள காலையுடைய மறவர்களின் ஆரவாரமிக்க சிறிய ஊரில் இரவில் தங்கி முதிய பெண்ணின் சோர்ந்த கால்களையுடைய குடிசையில் இளம் மயிலைப் போன்ற எனது நடை மெலிந்த பேதைமகள் தன் தலைவன் தனது தோளையே அணையாக வைத்துத் தூங்கப்பண்ணவும் தூங்காதவளாகி என அகநானூறும் வெறுக்கத்தக்கது காமம், ஒருசிறிதும் நன்று என உணராதவரிடத்தும் வலிந்து சென்று நிற்கும் பெரும் மடமையை உடையது எனக் குறுந்தொகையும் விளக்குகிறது.*

***நோதக்கன்றே காமம் யாவதும்***
***நன்று என உணரார் மாட்டும்***
***சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே (குறு.78:4-6)***

*அறிவு எனப்படுவது முடர்களின் சொற்களைப் பொறுத்துக்கொள்ளுதல் எனக் கலித்தொகை விளக்கம் தருகின்றது.*

***அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல் (கலி.133:10)***

**மடன்**

*வளைந்த கால்களையுடைய முதலையின் கொல்லுதலில் வல்ல ஆணானது வழியில் பிறர் செல்வதை இல்லாமற்செய்யும் கடற்கரைச் சோலையுள்ள அழகிய பெரிய துறையில் திரளான மீன்களுள்ள கரிய கழியை நீந்திக் கடந்து, நீ உனது அன்புடைமையால் வருகிறாய்; இவள் தனது அறியாமை உடைமையால் மகிழ்கிறாள் எனக் குறுந்தொகை விளக்கம் தருகிறது.*

***கொடும் தாள் முதலை கோள் வல் ஏற்றை***
***வழி வழக்கு அறுக்கும் கானல் அம் பெரும் துறை***
***இன மீன் இரும் கழி நீந்தி நீ நின்***
***நயன் உடைமையின் வருதி இவள் தன்***
***மடன் உடைமையின் உவக்கும் யான் அது (குறு.324:1-5)***

*என் பெற்றோரின் விருப்பமும் எனது மடனும் ஒருசேர நீங்கிப்போக, நெடிய தேரையுடைய என் தந்தையின் அரிய காவலையும் மீறி, தலைவனும் யானுமே ஆய்ந்துசெய்த மணம் இது எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.*

***மாதரும் மடனும் ஓராங்கு தணப்ப***
***நெடும் தேர் எந்தை அரும் கடி நீவி***
***இருவேம் ஆய்ந்த மன்றல் இது (குறி.19-21)***
***அன்பும் மடனும் சாயலும் இயல்பும் - அகம் 225/1***

**அழுகைச் சுவை**

***இளிவே இழவே அசைவே வறுமை என***
***விளிவில் கொள்கை அழுகை நான்கே (தொல்.மெய்ப்பாடு - 1199)***

*அழுகைச் சுவை என்ற மெய்ப்பாடு இளிவு, இழவு, அசைவு, வறுமை எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார்.*

**இளிவு**

***இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு என (குறு.283:2)***
***அரிது மன்று அம்ம இன்மையது இளிவே (நற்.262:10)***

**இளிவரல்**

***மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு***
***யாப்புற வந்த இளிவரல் நான்கே (தொல்.மெய்ப்பாடு - 1200)***

*இளிவரல் சுவை என்ற மெய்ப்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். பரிபாடல் இல்லத்துக்கு நீ தனியே செல்லுதல் இளிவரல் என்கிறது.*

***இல்லத்து நீ தனி சேறல் இளிவரல் (பரி.11:44)***

*மேலும், இல்லாமையை உணர்ந்து அவர்தம் இழிந்த நிலையைக் கூறுவதற்கு முன் வேற்றாரை வேற்றார் தொழுதல் இளிவரல் என்கிறது பரிபாடலின் மற்றொரு பாடல்.*

***இல்லது நோக்கி இளிவரவு கூறா முன் (பரி.10:87)***

**மூப்பு**

*சங்க இலக்கியங்களில் மூப்பு என்ற சொல்லுக்கு முதுமை, பழமை என்ற பொருள் கொள்ளப்படுகிறது.*

***போற்றாய் பெரும நீ காமம் புகர்பட***
***வேற்றுமை கொண்டு பொருள்வயின் போகுவாய்***
***கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு***
***மாற்றுமை கொண்ட வழி* (கலி.12:16-19)**

*பெருமானே நீ! காம இன்பம் கெட்டுப்போகும்படி அதனுடன் மாறுபட்டு பொருளைத் தேடிச் செல்கின்றவனே! இறப்பும் முதுமையும் எல்லாருக்கும் உண்டு என்பதனை மறந்துவிட்டவரோடு ஒன்றுசேர்ந்து உலகியலுக்கு ஒவ்வாத மாறுபட்ட வழியை உணர்த்துபவனே என்கிறது கலித்தொகை*

***மூப்பு உடை முது பதி தாக்கு அணங்கு உடைய* (அகம்.7:4)**

*மிகப் பழமை வாய்ந்த இந்த மூதூர் வருத்தும் தெய்வங்களை உடையது என்கிறது அகம்.*

**பிணி**

*சங்க இலக்கியங்களில் பிணி என்ற சொல் வினையாகக் கொள்ளுமிடத்து சேர்த்துக்கட்டு, தன்வயப்படுத்து என்ற பொருளிலும் பற்று, கட்டுகை, சேர்த்துப்பிடித்தல், முயக்கம், அணைப்பு, கட்டு, மாட்டு, இறுகிய முறுக்கு, பற்று, நோய் என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றது.*

***நடுங்கு பிணி நலிய நல் எழில் சாஅய்***
***துனி கூர் மனத்தள்* (நற்.262:4-5)**

*நடுங்கவைக்கும் காதல்நோய் வருத்த, நல்ல அழகெல்லாம் தொலைந்து, கசந்துபோன மனத்தினளாய் என நற்றிணை விளக்கம் தருகிறது.*

**மருட்கைச் சுவை**

***புதுமை பெறுமை சிறுமை ஆக்கமொடு***
***மதிமை சாலா மருட்கை நான்கே* (தொல்.மெய்ப்பாடு - 1201)**

*மருட்கைச் சுவை என்ற மெய்ப்பாடு புதுமை, பெறுமை, சிறுமை, ஆக்கம் எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். சங்க இலக்கியங்களில் மருட்கை என்ற சொல் மருட்சி, மனக்கலக்கம், தடுமாற்றம், வியப்பு என்ற பொருளில் விளக்கம் தரப்படுகின்றது.*

*பெரிய மலைநாடனே! என் மனம் மருட்சியடைகின்றது, நிமிர்ந்த தண்டினையும் வளைந்த கதிர்களையும் கொண்ட சிறுதினையின் அகன்ற கொல்லைக்காடு கதிர் அறுக்கும் பருவத்தை அடையும் இந்த நேரத்தில், எமது கருத்த நெய்ப்பசையுள்ள கூந்தலைக்கொண்டவளின் சிறப்பு மிக்க நலம் சிதைந்துவிடுமே என நற்றிணை விளக்கம் தருகிறது.*

***மா மலை நாட மருட்கை உடைத்தே***
***செம் கோல் கொடும் குரல் சிறுதினை வியன் புனம்***
***கொய் பதம் குறுகும்காலை எம்***
***மை ஈர் ஓதி மாண் நலம் தொலைவே* (நற்.57:7-10)**

*மேலும், புறநானூறு கருதுங்காலத்து வியக்கும் தன்மையுடையது எத்துணையும் பெரிய தலைமையுடனே இவன் சிறப்புகளைக் கைவிட்டு வரத் துணிதல் என்று கூறுகிறது.*

***நினைக்கும்காலை மருட்கை உடைத்தே***
***எனை பெரும் சிறப்பினோடு ஈங்கு இது துணிதல்* புறம் 217/1,2**

**ஆக்கம்**

*முன்னேற்றம், விருத்தி, வளர்ச்சி, விளைவு, பயன், செல்வம் என்னும் பொருள்களில் ஆக்கம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது.*

***நினையின்***
***நட்டோர் ஆக்கம் வேண்டியும் ஒட்டிய***
***நின் தோள் அணி பெற வரற்கும்***
***அன்றோ தோழி அவர் சென்ற திறமே (நற்.286:6-9)***

*நினைத்துப் பார்த்தால் தம் நண்பர்களின் வளர்ச்சிக்காவும், அவரை அண்டியிருக்கும் உனது தோள்கள் அணிகலன்களால் வனப்பெய்யவும் அன்றோ தோழி! அவர் சென்றதன் நோக்கம் என்கிறது நற்றிணை.*

*மேலும், தமக்கு உயர்ச்சி மிகும்படியாகத் தாம் பெறும் பயனைப் பாராமல், அரசரின் வளர்ச்சிக்காகவே முயலும் அமைச்சரை ஒரு வரையின்றிக் கோபிக்கும் பொழுதில் கருணையின்றி அவரின் உயிரைப் பறிக்கும் அரசனின் வாழ்வு அழிந்துபோவதைக்காட்டிலும் விரைந்து அழியும் நிலையற்ற பொருளையா விரும்பிச் செல்கிறாய் எனக் கலித்தொகை விளக்கம் பகர்கின்றது.*

***புரை தவ பயன் நோக்கார் தம் ஆக்கம் முயல்வாரை***
***வரைவு இன்றி செறும் பொழுதில் கண்ணோடாது உயிர் வௌவும்***
***அரைசினும் நிலை இல்லா பொருளையும் நச்சுபவோ (கலி.8:15-17)***

**அச்சச் சுவை**

***அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்***
***பிணங்கல் சாலா அச்சம் நான்கே (தொல்.மெய்ப்பாடு - 1202)***

*அச்சச் சுவை என்ற மெய்ப்பாடு அணங்கு, விலங்கு, கள்வர், தம்இறை எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார்.*

**விலங்கு**

*சங்க இலக்கியங்களில் விலங்கு என்று சொல்லுக்கு குறுக்கீடு, ஒதுங்கு, மாறுபடு, கடந்து செல், மாட்டு, தவிர், தடு, விலக்கு, வளை, தவறுசெய், விலகு, நீங்கு, தவறுசெய், குறுக்கு, மிருகம் என்ற சொற்களில் பொருள் கொள்ளப்படுகின்றது.*

*நறிய பூக்களாலான படுக்கையில் களிப்புற்றுத் தூங்கும் எண்ணி முயலாத இன்பத்தை எளிதாக, நின் மலையிலுள்ள பல்வேறு விலங்குகளும் எய்தும் நாடனே! என அகம் உரைக்கின்றது.*

***நறு வீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்***
***குறியா இன்பம் எளிதின் நின் மலை***
***பல் வேறு விலங்கும் எய்தும் நாட (அகம். 2:7-9)***

**பெருமிதச் சுவை**

***கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்***
***சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே (தொல்.மெய்ப்பாடு - 1203)***

*பெருமிதச் சுவை என்ற மெய்ப்பாடு கல்வி, தறுகண், இசைமை, கொடை எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். பெருமிதம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் செருக்கு என்ற பொருளில் எடுத்தாளப்படுகின்றது.*

***அச்சொடு தாக்கி பார் உற்று இயங்கிய***
***பண்ட சாகாட்டு ஆழ்ச்சி சொலிய***
***அரி மணல் ஞெமர கல் பக நடக்கும்***
***பெருமித பகட்டுக்கு துறையும் உண்டோ (புறம்.90:6-9)***

*உடைந்த வளையல் போல மலர்ந்திருக்கும் காந்தள் மலரும், இலை மலிந்த குளவி மலரும் மணம் கமழும் மலைச்சாரலில், புலி சீறின் மான் கூட்டம் நிற்குமா? மயக்கம் தரும் வானத்துத் திசைகளில், ஞாயிறு காய்ந்தால் இருளும் உண்டோ? வரிமணல் கிழியும்படியும், தடுக்கும் கல் நொறுங்கும்படியும், அச்சு தாங்கும் அளவுக்குப் பண்டப் பாரம் ஏற்றிய வண்டியை இழுத்துச் செல்லும் பெருமிதக் காளைக்குக் கடக்கமுடியாத நிலப்பகுதியும் உண்டோ? கோட்டைக் கதவின் தாழ்ப்பாள் போன்றதும், முழந்தாள் வரை நீண்டிருப்பதுமான குறை இல்லாத, வலிமை மிக்க கைகளை உடைய மழவர் பெருமானே! நீ போர்க்களம் புகுந்தால் உன் பெருநில மண்ணைக் கைப்பற்றி முழங்கவல்ல போராளிகளும் உள்ளனரோ? இல்லை எனப் புறநானூறு உரைக்கின்றது.*

**தறுகண்**

*கொல்லுதல், அஞ்சாமை என்ற பொருள்களில் தறுகண் என்ற சொல் சங்க இலக்கியங்களில் கையாளப்படுகின்றது. மென்மையான தினைப் பயிரை மேய்ந்த எதற்கும் அஞ்சாத காட்டுப்பன்றி என ஐங்குறுநூறு கூறுகின்றது.*

***மென் தினை மேய்ந்த தறுகண் பன்றி (ஐங்.261:1)***

**வெகுளிச் சுவை**

***உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற***
***வெறுப்ப வந்த வெகுளி நான்கே (தொல்.மெய்ப்பாடு - 1204)***

*வெகுளிச் சுவை என்ற மெய்ப்பாடு உறுப்பறை, குடிகோள், அலை, கொலை எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். சங்க இலக்கியங்களில் வெகுளி என்ற சொல் கோபம், சீற்றம் என்ற பொருள்களில் எடுத்துரைக்கப்படுகின்றது.*

***வெருவரு செலவின் வெகுளி வேழம்***
***தரவு இடை தங்கல் ஓவு இலனே பொரு 172,173***

*அச்சம் தரும் ஓட்டத்தையும், சினத்தையும் உடைய யானைகளை தரும்போது நிலைகொள்ளலில் ஒழிதல் இலன் எனப் பொருநராற்றுப்படை உரைக்கின்றது.*

**உவகைச் சுவை**

***செல்வம் புலனே புணர்வு விளையாட்டு***
***அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்.மெய்ப்பாடு - 1205)***

*உவகைச் சுவை என்ற மெய்ப்பாடு செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு எனும் இடங்களிலும் தோன்றப்பெறும் என்று தொல்காப்பியர் சுட்டுகிறார். சங்கப் பாக்களில் மகிழ்ச்சி என்ற பொருளில் உவகை என்ற சொல் பயன்படுத்தபடுகிறது. பெறுவதற்குப் பரிசில் ஒன்றும் இல்லாமையால் உவகை இன்றி எனப் புறநானூறு விளக்கம் தருகின்றது.*

***முகவை இன்மையின் உகவை இன்றி (புறம்.368:11)***

**புணர்வு**

*நம்மை மணங்கொண்டு சேர்தல் இல்லாத அன்பில்லாதவரின் நட்பு என நற்றிணை கூறுகின்றது.*

***நம் புணர்வு இல்லா நயன் இலோர் நட்பு (நற்.165:7)***

**விளையாட்டு**

*பந்தர் ஓடி*
*ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி*
*அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள்-கொல் (நற்.110:7-9)*

பந்தல்கால்களுக்கிடையே ஓடி செவிலியரின் கெஞ்சலை மறுக்கும் சிறிய விளையாட்டைச் செய்பவள், இல்லறத்துக்குரிய அறிவையும் ஒழுக்கத்தையும் எங்கிருந்து கற்றுக்கொண்டாளோ? என நற்றிணை கேள்வியை எழுப்புகிறது.

மேற்கண்ட தரவுகளின்படி, தொல்காப்பியர் சுட்டிய எண்வகை மெய்ப்பாடுகளில் நகை, இளிவரல், மருட்கை, பெறுமிதம், வெகுளி, உவகை ஆகிய ஆறு மெய்ப்பாடுகளும் பேதைமை, மடன், இளவு, மூப்பு, பிணி, ஆக்கம், விலங்கு, தறுகண், புணர்வு, விளையாட்டு ஆகிய பத்து மெய்ப்பாடு தோன்றுமிடங்களும் காணக்கிடக்கின்றன.

அச்சம், அழுகை எனும் மெய்ப்பாடுகளும் எள்ளல், இளமை, இளிவு, அசைவு, வறுமை, வருத்தம், மென்மை, புதுமை, பெருமை, சிறுமை, அணங்கு, கள்வர், தம்இறை, கல்வி, இசைமை, கொடை, உறுப்பறை, குடிகோள், அலை, கொலை, செல்வம், புலன் ஆகிய இருபத்திரண்டு மெய்ப்பாடு தோன்றுமிடங்களின் வருகை முறைகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கவில்லை.

இந்த ஆய்வானது சங்கப்பாக்களின் வழியாகத் தொல்காப்பிய மெய்ப்பாடுகளின் வருகைகளை எடுத்துரைக்கின்றது. இதுபோன்று சங்க இலக்கியத்திற்குப் பிந்தியதான இலக்கியங்களிலும் இதன் வருகையை அறிவதும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் அவ்வப்போது பதிவு செய்வதும் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுகளுக்கும் இதுதொடர்பான பின் ஆய்வுகளுக்கும் பெரிதும் துணைபுரிவதாக அமையும்.

**நூற்பட்டியல்**


1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்
2. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
3. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
5. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
6. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்
7. சுப்ரமணியம்.ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
8. சிற்பி பாலசுப்பிரமணியன், நீலபத்மநாபன், 2013, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, சாகித்திய அகாதெமி
9. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
10. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், 2017, சென்னை, அமராவதி பதிப்பகம்.


## References


1. Elampooranar Urai. 2010, Tholkappiya Porulathikaaram Moolamum Uraium, Chennai, Saratha Publication.
2. Sangam Literature, Ettuthogai - Vol I, 2014, Chennai New Century Book House.
3. Sangam Literature, Ettuthogai - Vol II, 2014, Chennai New Century Book House.
4. Sangam Literature, Ettuthogai - Vol III, 2014, Chennai New Century Book House.
5. Sangam Literature Patthupattu - Vol I, 2014, Chennai New Century Book House.
6. Sangam Literature Patthupattu - Vol II, 2014, Chennai New Century Book House

7. Subramaniam.Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication.
8. Sirpi Balasubramaniyan & Neelapathmanaban, Puthiya Nokki Tamil Ilakkiya Varalaru, 2013, New Delhi, Sakthiya Academy
9. Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol – III, 2006, Chennai, Manivasagar Publications.
10. Perachiriyarin Urai, Tholkappiyam Porullathikaaram, 2017, Chennai, Amaravathi Publication.